பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 30 | திங்கட்கிழமை | 16.10.2023 | அதிர்வு 76

## நேற்றிரவு சீனா பறந்தார் ரணில்



சீனாவில் நடைபெறும் 'ஒரே மண்டலம் ஒரே பாதை' திட்டதின் சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் 02▶

# ஹர்த்தாலுக்கு ஆதரவு வேண்டி நாளை கிழக்கில் களமிறங்கும் தமிழ்க் கட்சிகள்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்க் கட்சிகளின் சார்பில் மாவை சேனாதிராஜா, சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

அதேநேரத்தில் அங்கு இருக்கக்கூடிய 05▶

# அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வு உறுதி



## அமைச்சர் சுசில் நம்பிக்கை

- சுடர் திலீபன் -

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை உண்டு."

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த. 02▶

# 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து புதனன்று மோடிக்குக் கடிதம்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாளைமறுதினம் புதன்கிழமை 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து கடிதம் அனுப்பவுள்ளன என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படவுள்ள கடிதம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02▶

## முரசில் கம்பவாரிதி கைவண்ணம்



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

அவர்கள்

வாரம் தோறும் சனிக்கிழமைகளில்

தனது

உரலார் கேள்வி -
உலக்கையார் பதிலின்

மூலம்

'முரசு' வாசகர்களுடன் ஊடாட மகிழ்வுடன் இசைந்துள்ளார். இவ்வாரத்துக்கான ஊடாட்டம் இன்று பிரசுரமாகின்றது. அதன்பின் சனி தோறும் அவர் நம் வாசகர்களைச் சந்திப்பார்.

## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

– எஸ்.நிதர்ஷன் –

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 02▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பொன்.செல்வராஜாவின் இறுதிக் கிரியைகள் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றன. கிழக்கு மாகாண நண்பர் ஒருவர் – என் செய்தி மூலங்களின் ஒருவர் – அங்கிருந்து தொலைபேசி அழைப்பு எடுத்தார். மட்டக்களப்பின் கொஞ்சு தமிழில் தகவல்களைத் தந்தார்.

முதலில் "மாயா அண்ண வந்திருக்காக... மாப்பிள்ளை மொக்கச்சாமி 02▶

## நேற்றிரவு சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு சீனாவுக்குப் பயணமானார்.

ஜனாதிபதி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருப்பார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் அவருக்குக் கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாளை (16) முதல் இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதில் நிதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பதில் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பதில் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி பதில் சுற்றாடல் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினரால் 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்போது இந்திய மீனவர்களின் 3 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வந்து, மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினத்துக்கு வழக்கையும் ஒத்திவைத்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்திருக்காக... மற்றும் நம் உறவினர்கள் எல்லாம் வந்திருக்காக...!" என்ற மாதிரி, அந்த இறுதி நிகழ்வுக்கு வந்திருந்தோர் விவரங்களை எல்லாம் வரிசையாகக் கூறிக்கொண்டு வந்தார்.

மயிலத்தமடு மேய்ச்சல் தரைச் சர்ச்சை தொடர்பான உயர்மட்ட மாநாடு நேற்று கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றமையால் – அதில் பங்குபற்ற வேண்டிய காரணத்தினால் – நேற்று மட்டக்களப்பில் நடந்த இறுதி நிகழ்வில் சாணக்கியன் எம்.பி. இல்லை என்ற தகவலையும் அவர் சொன்னார்.

அதற்குப் பின்னர் அவர் சொன்ன தகவல்கள்தான் முக்கியமானவை.

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு எம்.பிக்கள் – சுமந்திரனும் ஸ்ரீதரனும் – வந்திருந்தனர் என்று கூறிய அவர், யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்த தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரை வைத்துக் கொண்டு, சுமந்திரன் எம்.பி. அமரர் செல்வராஜாவுக்கு அஞ்சலி செலுத்தி ஆற்றிய உரை அர்த்தம் மிகுந்தது என்றார்.

அங்கு சுமந்திரன் அஞ்சலி உரையில் குறிப்பிட்டவை என்று அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-

அமரர் செல்வராஜாவுக்கு இறுதிக் காலத்தில் சிறுநீரகம் பழுதடைந்து இருந்தது. அதுதான் அவரது சுகவீனம். அதற்காக அவருக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய ஆலோசனை கூறப்பட்டது. நாங்கள் எல்லோரும் வற்புறுத்தினோம். அவர் மறுத்துவிட்டார். நெருங்கியவர்கள் அதற்கு ஒழுங்குகள் செய்யத் தயாராக இருந்தார்கள். ஏற்பாடுகளுக்கு அவர்கள் தயாரான போது செல்வராஜாவே அதைத் தடுத்து விட்டார்.

'எனக்கு வயது எழுபத்தியைந்தைத் தாண்டிவிட்டது. எனக்கு ஒரு சிறுநீரகம் அளிப்பது என்றால் அதனை ஓர் இளைஞனிடமிருந்துதான் பெற வேண்டும். ஆனால் எதிர்காலம் அவர்களுக்குரியது. வயதான எங்களுக்கு அல்ல. ஆகவே வேண்டாம்' என்று அவர் மறுத்து விட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலே அவருக்கு மிக முக்கிய பதவிப் பொறுப்பைக் கொடுக்க நாங்கள் முன் வந்தோம். அவரை வற்புறுத்தினோம். அவர் அதற்கும் மறுத்துவிட்டார். அது இளைஞர்களிடம் – அடுத்த தலைமுறையிடம் – கையளிக்கப்பட வேண்டும் என்பது அவர் சிந்தையாக இருந்தது. அவர் விரும்பியிருந்தால் – அவர் தலையசைத்து இருந்தால் – அப்பதவி சுலபமாக அவர் வசமாகியிருக்கும். அவர் தான் நினைத்திருந்தால், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவராகவும் தொடர்ந்து இருந்திருக்க முடியும். இன்றைய தலைமுறைக்கு அந்தப் பொறுப்பை அவர் மாற்றினார். மாவட்டத் தலைவராக இருந்த 77 வயதான அவர், ஆக 33 வயதான சாணக்கியனிடம் மட்டக்களப்பு மாவட்டத் தலைமையை ஒப்படைத்து விட்டு, அந்த மனத் திருப்தியுடன்தான் நம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

– இதுதான் சுமந்திரனின் உரையின் பிரதான அம்சம் என்றார் அந்த நண்பர்.

இது அமரர் செல்வராஜாவுக்கான அஞ்சலியுரை மட்டுமல்ல, தமிழரசை வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கான யோசனை உரையும் கூட என்று குறிப்பிட்ட அந்த நண்பர், செல்வராஜாவின் சிந்தனை தொடர்பில் கட்சித் தலைமைக்கு சுமந்திரன் தெரிவித்த தகவல் அல்லது அதன் சாரம் விளங்கினால் தமிழரசு தப்பிப் பிழைக்கும் என்று என்னிடம் கூறவும் தவறவில்லை.

சுமந்திரனின் இந்த உரைக்குக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் பிரதிபலிப்பு என்ன என்று கேட்டேன்.

சுமந்திரனுக்கு முன்னர் மாவை சேனாதிராஜா பேசிவிட்டார். அதனால் அவருக்குப் பிரதிபலிப்புக் காட்ட வாய்ப்புக் கிட்டவில்லை, ஆனால் அவர் தமது உரையில் வழமை போல, மட்டக்களப்பிற்கு வந்து தான் போராடியமை, கைது செய்யப்பட்டமை, சிறை சென்றமை, தங்களை தந்தை செல்வா வந்து பார்த்தமை என்ற சுயபுராணத்தை விடவில்லை என்று சினந்தார் அந்த நண்பர்.

இன்றைய பத்தியில் என் கருத்து எதுவுமில்லை வாசகர்களே! அனைத்தும் அந்த நண்பரின் தகவல்களும் கருத்துக்களுமே. நான் அவற்றை இன்று இங்கு வெறுமனே அறிக்கையிட்டுள்ளேன். அவ்வளவுதான்.

## அடுத்த வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதி மீதும், அரசு மீதும் குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்து வருகின்றார்கள். ஆனால், அவர்கள் தீர்வுகளைக் காண்பதற்கு அரசுடன் இணைந்து செயற்படப் பின்னடிக்கின்றார்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அரசு முன்வைத்த பின்னர் அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்று தமிழ் அரசியல்வாதிகள் நிபந்தனையை முன்வைக்கின்றார்கள். தீர்வுகள் கிடைத்த பின் ஆதரவு எதற்கு? ஆதரவை வழங்கி அரசுடன் இணைந்து பயணித்தால்தானே தீர்வுகளை வென்றெடுக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை உண்டு. நாம் வாயால் சொல்வது செயலில் நடப்பது கடினம்தான். எனினும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் அரச தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தால் அது மேலும் பலமாக இருக்கும் தீர்வுகளை நாம் விரைந்து வென்றெடுக்க முடியும்."

– என்றார்.

## 7 தமிழ்க் கட்சிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியப் பிரதமரை நேரில் சந்திக்க அனுமதி கேட்டு அவருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டாகக் கடிதம் அனுப்புவது தொடர்பில் நேற்றைய தினம் கலந்துரையாடியிருந்தோம்.

இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அதனை எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளவுள்ளோம். எதிர்வரும் புதன்கிழமையளவில் நரேந்திர மோடிக்கான கடிதத்தை 7 கட்சித் தலைவர்களும் ஒப்பமிட்டு அனுப்பவுள்ளோம்."

என்றார்.

# தலைவர்கள் வீதிக்கு இறங்காமல் மக்களை இறங்கக் கோரலாமா?

## தமிழ் தேசிய பசுமை இயக்க உரையரங்கில் கேள்வி

சமகால அரசியல் உரையரங்கு இன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

இதன்போது போது பல்கலைக்கழக பேராசிரியர்கள், பொதுமக்கள், மாண வர்கள், அரசியல் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நல்லூர் இளங்கலைனர் மண்டபத்தில் சுடரேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் உரையாடல் இடம்பெற்றது.

**பொ.ஐங்கரநேசன்**

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தமது உரை யில் கூறியவை வருமாறு:-

த்துவதல்ல. 30, 40 வருடங்களுக்கு முந்திய ஒரு போராட்ட வழிமுறையில் இருந்து நாங்கள் மீண்டும் தொடர்வதா என்கின்ற ஒரு கேள்வி எழுகின்றது.

என்னை பொறுத்தவரையில் அவ்வாறு அல்ல. நாங்கள் கட்சிகளினுடைய தலைவர் கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் தாங்கள் போராட முன் வரவேண்டும். தாங்கள் வீதிக்கு இறங்காமல் மக்களை வீதிக்கு இறங்குமாறு கூறுவது வந்து எந்த வகையிலும் சாத்தியமில்லாதது.

நாங்கள் இதயசுத்தியாக போராடுகி றோமா என்று கேட்டால் நிச்சயமாக



இஸ்ரேலுக்கும் காசா பகுதிக்கும் இடையில் இருக்கக்கூடிய ஹமாஸ் போராளிகளுக்கு இடையிலான யுத்தம் தொடர்பான செய்திகள் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. மாறி வருகின்ற இந்த அரசியல் கள நிலைமைகள் தொடர்பாக நாங்கள் தெரிந்து கொண்டி ருக்க வேண்டும். அவ்வாறு நாங்கள் தெரிந்து கொண்டிருந்தால் மாத்திரம் தான் நாங்கள் சரியான முடிவுகளை, சரியான நேரங்களில் எடுக்க முடியும்.

நான் என்னுடைய தரப்பில் பசுமை இயக்கத்தினுடைய நிலைப்பாடாக இரண்டு கருத்துக்களை மாத்திரம் சொல்லுகின்றேன்.

கடந்த சில வாரங்களாக என்னிடம் சிலர் கேட்ட கேள்வி மனித சங்கிலிப் போராட்டத்தில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை, நடைபெறுகின்ற ஹர்த்தால் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு ? என்பதாகும்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழ் தேசியத்தை பொறுத்தவரையில் ஆறுகள் ஒருபோதும் பின்னோக்கிப் பாய்வதில்லை. வரலாறும் ஒருபோதும் பின்னோக்கி திரும்பாது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. எந்த இடத்தில் எங்களை இந்தப் போராட்டம் கொண்டு வந்து நிறுத்தியது? அங்கிருந்து நாம் நகர வேண்டும்.

ஆயுதப் போராட்டம் சாத்தியமற்ற ஒரு நிலையில்தமிழ்தேசியவிடுதலைப்போராட் டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது

இல்லை.

நல்லூரில் திலீபனுடைய நினை வேந்தல் போராட்டத்தின் பொழுது காலை வேளையில் இணையத் தளங்களைப் பார்த்து அந்த வரிசையில் யார், யார் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தேன். அன்று பகல் நான் கல்வியங்காடு சந்தைக்கு சென்றிருந்த பொழுது - 11 மணியளவில் - அதே உண்ணாவிரத மேடையில் இருந்த அந்த அரசியல் தலைவர் மீன் வாங்கிக் கொண் டிருந்தமையை நான் கண்டேன்.

இது மிகையல்ல. உண்மை. அன்று மாலை அதே தலைவர் அந்த உண்ணா விரத மேடையில் இருந்து உண்ணாவிர தத்தை முடிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர் இருந்தமையையும் நான் கண்டேன்.

இங்கே இதயசுத்தி, ஆத்ம சுத்தி இல்லாமல் நாங்கள் முன்னெடுக்கின்ற போராட்டம் எவ்வாறு வெற்றி பெறும்?

நாங்கள் வீதிக்கு வரலாம். மக்கள்





உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக வரிக் கப்பட்ட ஒரு வடிவம் அது.

வாக்களிக்கின்றோம், தமிழ் தேசியம் என்கின்ற அந்த ஒற்றைச் சொல்லுக்கு வாக்களிக்கின்றோம் என்பதை மாத்திரம் வைத்து நாங்கள் கைநீட்டும் பக்கம் எல் லாம் மக்கள் வருவார்கள் என்று கனவு காண்பதன் விளைவுதான் இந்த மனித சங்கிலிப் போராட்டம்.

அன்றைய தினம் அது தோற்றது. அங்கே மருதனார்மடத்திலிருந்து சத்தி ரத்துச் சந்தி வரை கைகோர்த்து நிற்க ஆள்கள் இருந்திருக்க வேண்டும். அத் தனை தலைவர்களும் குறைந்தபட்சம் ஆளுக்கு நூறு பேரை அழைத்து வந்திருந் தால் அந்த மனித சங்கிலி போராட்டம் நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கும். உலகத் தையும் எங்களைத் திரும்பிப் பார்க்க வைத்திருந்திருக்கும். நாங்கள் எங்களை மிகைப்படுத்திக் கொள்கிறோம். நாங்கள் சொன்னால் விடயங்கள் நடப்பதற்கு நாங்கள் ஒன்றும் பிரபாகரன் அல்லர் - கையசைவிலும் கண்ணசைவிலும் துப்பாக்கிகளினுடைய முனையிலும் இந்த உலகத்தைக் கட்டிப்போடுவதற்கு. நாங்கள் அவர் வழி வந்தவர்கள் அல்லர். நாங்கள் தேசியம் பேசுகின்ற போலிகள். இதனால்தான் மக்கள் எங்கள் பின்னால் வருவதற்குத் தயங்குகிறார்கள்.

இந்தப் போராட்ட வடிவங்களை எவ் வாறு ஒரு முகத்துடன் ஒருங்கிணைத்து சிங்கள மக்களினால் மாதக்கணக்காக முன்னெடுக்க முடியுமாக இருந்தால், அவ்வாறான ஒரு போராட்ட வடிவத்தை எதற்காக எங்களுடைய தலைவர்களி னால் முன்னெடுக்க முடியாது?

எங்களுடைய வேட்டிகளினுடைய தலைப்பு கூட கசங்க கூடாது என்று

(4ஆம் பக்கம் பார்க்க...)

## தலைவர்கள் வீதிக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)

சொல்லி நின்று கொண்டு நாங்கள் போராட்டம் நடத்துவது சரியா?

அடுத்தது ஹர்த்தால். கடையடைப்பு. அதுவும் அரசாங்கத்துக்கு எதிராக எங்களுடைய எதிர்ப்பு வடிவங்களை காட்டுவதற்கான ஒரு போராட்ட வடிவம். ஆயுதப் போராட்டம் முளை விடுவதற்கு முன்பா




தாக தமிழ் தேசிய இனம் தன்னுடைய ஆரம்பக் கட்ட போராட்டமாக வரித்துக் கொண்ட – வடிவமைத்த – விடயங்களில் இந்த கடையடைப்பும் உண்டு.

ஆனால் இந்த கடையடைப்பு அரசாங்கத்துக்கு சொல்லப் போகின்ற செய்தி என்ன? அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப் போகின்ற பொருளாதார வீழ்ச்சி என்ன? அல்லது சர்வதேசத்துக்கு நாங்கள் இதற்கு ஊடாக என்ன சொல்ல போகின்றோம்? நாங்கள் கட்சிகள் இருக்கிறோம் என்பதை மாத்திரம்தான் சொல்ல போகின்றோமா? நான் இரண்டு, மூன்று தினங்களாக பல இடங்களில் இது தொடர்பாக விசாரித்தேன்.

நீங்கள் இந்த நாளில் உங்களுடைய பணியாளர்களுக்கு வேதனம் கொடுப்பீர்களா என்று கேட்டபோது அவர்கள் சங்கத்துடன்தான் பதிலளித்தார்கள். எப்படி நாங்கள் கொடுக்க முடியும்? மாதத்தில்



இத்தனை நாள் அல்லது கிழமையில் ஒரு நாள் அவர்களுக்கு விடுமுறை என்று அறிவித்திருக்கின்றோம்.

அந்த விதிமுறையை மீறி அவர்களுக்கான வேதனத்தை நாங்கள் கொடுக்க முடியாது என்றார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வெறுமனே மேடைகளில் அரசியல் பேசுகின்ற – தேசியம் முழங்குகின்ற – ஓர் அமைப்பு அல்ல. வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழுகின்ற மக்களுடன் எங்களுக்கு நெருக்கமான தொடர்பு இருக்கின்றது. அவர்கள் படுகின்ற கஷ்டங்களினுடைய வலி எங்களுக்குத் தெரியும். ஒருவேளை உணவுக்கு அவர்கள் ஒரு நாள் கூலிப் பணம் கொண்டு வந்தால் மாத்திரம் தான் அவர்களின் வாழ்வு நடைபெறும். – என்றார்.

### என்.நிலாந்தன்

அரசியல் விமர்சகர் நிலாந்தன் அங்கு கூறியவை வருமாறு:–

தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு என்ற தலைப்பிலே ஐ.நா. கூட்டத் தொடர் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் பேச வந்திருக்கிறோம்.

தற்போது பலர் தேசியத்தை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். கனடா இரண்டு ராஜபக்ஷக்களுக்கும் பயண தடை மாத்திரமல்ல, முதலீடு செய்வதற்கும் தடை விதித்திருந்தது. இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடற்படை தளபதி மற்றும் ஏனைய தளபதிகளுக்கும் அமெரிக்கா பயணத்தடை விரித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான சட்டத்தைக் கனடா உருவாக்கியுள்ளது. இதை அமெரிக்க கண்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்.

எமக்கு சாதகமான விடயம் ஐ.நா. சேகரிக்கும் டாட்சியங்கள். அது ஓர் அமைப்பில் இயங்கிக் கொண்டே இருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகளின் உதவிச் செயலாளர் இதுவரைவில் 10 பேரை இனம் கண்டுள்ளதாக தனது அறிக்கை தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு இது சாதகமாக அமைந்துள்ளது.

'சனல்–4' வீடியோ செயற்கையாக உருவாக்கப்பட்டதாகவும் தகவல் வருகிறது. ராஜபக்ஷக்களை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அழுத்தத்தை அது பிரயோகிக்கிறது. அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

ஆனால் இவை உள்நாட்டில் ராஜபக்ஷக்கள் தொடர்பில் செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் விடயங்களாக பார்க்க முடியும்.

ரணிலை வெல்ல வைப்பது தான் நோக்கம். ராஜபக்ஷக்கள் இப்போது ரணில்தான் தமது ஒரு பக்கமாகக் கருதுகிறார்கள். ரணிலை விட அவர்களுக்கு பாதுகாப்பான ஒருவர் கிடையாது.

இலங்கையின் நீதிக் கட்டமைப்பு, புலனாய்வுக் கட்டமைப்பு போன்றவை பொறுப்புக் கூறக்கூடியவை அல்ல என்ற விடயம் வெளிவருகிறது. அது பொறுப்பு கூறும் பண்புடையது அல்ல என்ற கருத்தும் வெளிவருகிறது.

அண்மையில் இந்திய உள்துறை அமைச்சர் இராமேஸ்வரத்தில் பேசும்போது இலங்கைத் தீவில் இடம் பெற்றது இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.

அண்ணாமலை நடை யாத்திரை தொடர்ந்த ஒரு நாளில் இதனை அவர் தெரிவித்தார்.

இந்தப் படுகொலைகளில் காங்கிரஸ் உடன் சேர்ந்து தி.மு.கவும் பங்கேற்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

தமிழர்களுக்கான வெளிவிகாரக் கொள்கை, வெளியுறவு கட்டமைப்பு, வெளியுறவு விடயங்கள் இருந்தாலும் இவற்றை யார் கையாளது? தமிழ் மக்களுக்கு யார் பொறுப்போ அவர்கள் தான் கையாள வேண்டும். ஆனால் அதனை யார் கையாள வேண்டும் என்பதைப் பற்றிக் கூட யாரும் சிந்திப்பதில்லை.

அதனை சரியாக கையாள்வதுதான் ராஜதந்திரம். இதனை கையாள்வதற்கு எம்மிடம் சரியான கட்டமைப்பு இல்லை.

ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்பதாக சில அமைப்புகளின் சந்திப்புகளிடம் நடைபெற்றது. உலக மட்டத் தமிழ் அமைப்புகள் அண்ணாமலையை கையாண்டார்கள். அண்ணாமலையை கையாள்வதும் பாரதி ஜனதா கட்சியைக் கையாள்வதும் ஒன்றுதான்.

இவற்றை விடவும் சிறிய அமைப்புகள் ஊடாக முன்னாள் போராளி அமைப்பையும் இந்திய அழைத்து சிறிய விடயங்களில் பங்குபற்ற வைக்கிறது. – என்றார்

### கே.ரி.கணேசலிங்கம்

இந்நிகழ்வில் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஹமாஸ் – இஸ்ரேல் போர் தொடர்பான விடயங்கள் குறித்து விவரித்தார்.

இஸ்ரேல் – பாலஸ்தீனப் போர் மற்றும் ஈழ விடுதலைப் போராட்டம் போன்றவை தொடர்பில் ஒப்பீட்டுக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இன்று வரை இடம் பெற்ற போரின் நிகழ்வுகள், போரின் பாதிப்புகள் தொடர்பில் அவர் விவரித்தார்.

# தமக்கு மட்டுமல்ல சுமந்திரனுக்கும் கூட சிகிச்சை அவசியம் என்கின்றார் விக்கி!



(பிரபாகரன் டிலக்சன்)

'ஆசிரியரும் மாணவரும் என' நானும் சுமந்திரனும் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இருக்கும் போலத் தெரிகிறது என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்பட்ட கடிதம் இந்தியப் பிரதமரைச் சென்றடையவில்லை என சி.வி. விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார். தனியார் சமூக ஊடகம் ஒன்றின் நேர்காணலில் கலந்து கொண்ட சுமந்திரன், இந்தியப் பிரதமருக்கு கடிதம் கிடைத்துள்ளதாகவும், விக்னேஸ்வரன் தமது மறதி வியாதிக்கு வைத்தியரை நாடுவது நல்லது எனவும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனக்குத் தெரிந்தவரையில் இந்தியப் பிரதமருக்குத் தமிழ் கட்சிகள் அனுப்பிய கடிதமானது இன்னும் அவரைச் சென்றடையவில்லை. அப்படித்தான் தகவல்கள் கிடைத்தன. இந்தியப் பிரதமரிடம் கடிதம் சென்றடைந்தது என்பது சுமந்திரனுக்கு நன்றாகத் தெரிந்து இருக்கும் எனில், எதற்காக இந்திய பிரதமர் அந்தக் கடிதத்திற்குரிய பதிலை அனுப்பவில்லை என்ற கேள்விக்கும் சுமந்திரனே பதில் சொல்ல வேண்டும்.

சுமந்திரன் சொல்வதுபோல் கடிதம் இந்தியப் பிரதமரிடம் சென்றடைந்திருந்தால் அதற்குரிய பதில் கடிதத்தை இந்தியப் பிரதமர் அனுப்பாதமைக்கு ஏதேனும் காரணம் ஒன்று இருக்க வேண்டும். எனனிடம் சொல்லப்பட்டது என்னவெனில் அது ஓர் இடத்தில் தேங்கி நிற்கின்றது என்பதுதான். பிரதமரிடம் சென்றடையவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமருடைய காரியாலயத்திற்கு செல்லும் கடிதங்கள் யாவற்றிற்கும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பதில் எழுதப்படும் எனக் கூறப்பட்டது. அவ்வாறான பதில் வராததை வைத்துதான் இந்தியப்பிரதமருக்கு தமிழ்க் கட்சிகள் அனுப்பிய கடிதம் சொல்லவில்லை எனச் சொல்ல வேண்டி ஏற்பட்டது.

இந்தியத் தூதுவர் பிரதமர் மோடியிடம் தமிழ் கட்சிகளின் கடிதத்தைக் கையளித்துவிட்டு சுமந்திரன் ஒரு பெரியஆள் என எண்ணித் தான் கடிதத்தைக் கையளித்துவிட்டார் எனத் தூதுவர் தொலைபேசியில் சொன்னார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

சிகிச்சை சுமந்திரனுக்கும் தேவைப்படலாம். எனக்கும் தேவையாக இருக்கலாம். நாங்கள் எல்லோரும் மனதால் பிரச்சினை பட்டவர்கள்தானே. ஆசிரியரும் மாணவரும் என நானும் சுமந்திரனும் இணைந்து சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்கும் போல தெரிகிறது. – எனத் தெரிவித்தார்.

## ஹர்த்தாலுக்கு ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனைய அமைப்புக்களுடனும், பல்வேறுபட்ட தரப்புக்களுடனும் பேசவுள்ளனர். அதனைத் தொடர்ந்து அங்கு விசேட ஊடகவியலாளர் மாநாட்டையும் அவர்கள் நடத்தவுள்ளனர்."

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று மாலை தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனின் யாழ். இல்லத்தில் இடம்பெற்றது. இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் அனைவரும் பேசி இறுதி முடிவொன்றை எடுத்திருக்கின்றோம்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய ஏனைய கட்சிகளுடைய தலைவர்களுடன் இணைந்து ஹர்த்தால் தொடர்பான விசேட ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளோம்.

எதிர்வரும் புதன்கிழமை திருகோணமலை மற்றும் வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு ஹர்த்தால் தொடர்பான விடயங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முல்லைத்தீவில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகாரலிங்கம் தலைமையில் நேற்று (14) வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டோம். எதிர்வரும் நாட்களில் கிளிநொச்சி வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

அந்தவகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முஸ்லிம் மக்களுடைய ஒத்துழைப்புடனும் சகல தமிழ்த் தரப்புக்களின் ஒத்துழைப்புடனும் இந்தக் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களுக்கான நீதி என்பது தொடர்ந்து மறுதலிக்கப்படுகின்றது என்பதை வலியுறுத்தியும், சிங்கள பௌத்த மக்கள் வாழாத தமிழ், முஸ்லிம் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் தொடர்ச்சியாகக் காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரைகள் நிறுவுவதற்கான வேலைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெறுவதைக் கண்டித்தும் நிறுத்தக் கோரியும், மட்டக்களப்பு – மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம்."

– என்றார்.

ஹர்த்தால் தொடர்பான நேற்றைய முன்னாயத்தக கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சந்தோஷ் நாராயணனின் யாழ் நிகழ்ச்சிகளுக்கான திகதிகளை மாற்றுமாறு கஜேந்திரர்கள் கோரிக்கை

## யாழ் ஆஸ்பத்திரிப் படுகொலைகளின் நினைவேந்தல் வருவதால்





தமிழக இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கும் இசை நிகழ்ச்சிகளை வேறு ஒரு திகதிக்கு மாற்றுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். எம்.பியும், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பியும் கூட்டாகக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்த வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளர்கள் உட்பட பொதுமக்கள் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சோக நிகழ்வின் நினைவேந்தல் அத்தினங்களில் வருகின்றமையால் அத்தினங்களில் கொண்டாட்ட நிகழ்வுகளைத் தவிர்க்கும்படி அவர்கள் வேண்டியுள்ளனர்.

இது தொடர்பாக இரண்டு எம்.பிக்களும் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்தின் விவரம் வருமாறு:-

தாங்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடததுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளீர்கள் என அறிய முடிகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலினை வெளிக்கொணரும் தங்களின் இசையமைப்பில் உருவான பாடல்களையும், இசையையும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்களும் கேட்டு, இரசித்து மகிழ்கிறோம். அந்த வகையில்உங்களுக்கு ஏராளமான இரசிகர்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள்.

பாரிய இனவழிப்பினை தமிழினம் சந்தித்ததனை நீங்கள் அறிவீர்கள். இவ்வினவழிப்பில் கொல்லப்பட்ட மக்களினை நினைவேந்தல் செய்வதன் முக்கியத்துவத்தையும் நீங்கள் உணர்வீர்கள். இந்லையில், தங்களால் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள ஒக்டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளாகிய இதே தினங்களில், 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்த வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளர்கள் உட்பட பொதுமக்கள் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதனை நீங்கள் அறிந்திருக்கக் கூடும்.

அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகிறோம். இந்தத் துயர் மிகுந்த நாள்களில், நினைவேந்தல்கள் ஊடாக அடுத்த சந்ததியினருக்குத் தமிழினப் போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையும் என நாம் நம்புகிறோம். இதனை மடைமாற்றி இந்நாள்களை இளைஞர்களுக்கான மகிழ்ச்சிகரமான களியாட்ட நாள்களாக மாற்றியமைக்க முயலும் இலங்கை - இந்திய அரசுகள் தங்களை பலிக்கடாவாக்க முயல்கிறார்கள்.

இந்நினைவேந்தல் நாள்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இசை நிகழ்ச்சிகளில் தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ கலந்து கொள்வதானது, அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை அவமதிக்கும் செயற்பாடு என்பதுடன், பேரினவாதத்தால் இன்றும் நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு துணைநிற்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும்.

மேற்படி நினைவேந்தல்களூடாக தமிழினம் அடுத்த சந்ததிக்கு கடத்த முயலும் தமிழின விடுதலை வேட்கைக்கும் எதிரான செயற்பாடாகவும் இது அமையும்.

தாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்திருப்பவர் என்னும் வகையில், இந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நினைவு தினங்களில் தங்களின் இசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது, இன்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களால் தவறாகவே பார்க்கப் படும் என்பதனை அன்புரிமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இறந்தவர்களை நினைவேந்தும் உரிமையை சர்வதேச சட்டங்களும் இலங்கைச் சட்டங்களும் அனுமதித்துள்ள போதும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு, சட்டவிரோதமாகத் தடைகளை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தரப்புக்கள், நினைவேந்தல்களுக்கு சட்டரீதியாகத் தடைகளை ஏற்படுத்த முடியாதபோது, இந்நாள்களைத் தெரிவு செய்து களியாட்ட தினங்களாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உலகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் இரசிகத்தளத்தைக் கொண்டிருக்கும் தாங்கள், தமிழ் மக்களின் வலிகளையும், வேதனைகளையும் உணர்ந்துகொண்டு இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் மதிப்பளித்து, அந்தத் திகதிகளை மாற்றி, பொருத்தமான வேறொரு திகதியில் தங்கள் நிகழ்வை மாற்றியமைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

# பொன்.செல்வராசாவின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்புமாவட்டமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான மறைந்த பொன்.செல்வராசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

மட்டக்களப்பிலுள்ள அன்னரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம் பெற்று, பூதவுடல் கள்ளியங்காடு தகன சாலையில் தகனம் செய்யப்பட்டது.

இறுதிக் கிரியை நிகழ்வில் அரசியல் வாதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் எம்.பி. பொன்.செல்வராசா நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் தனது 77 ஆவது வயதில் கடந்த வெள்ளிக் கிழமை காலமானார்.

# பொகவந்தலாவையில் மண்திட்டுகள் லயன் குடியிருப்பு தொகுதி மீது சரிவு






(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் தொடர் மழையால் மண் திட்டுகள் சரியும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்கள் இந்நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான பொகவந்தலாவை தெரேசியா தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பு தொகுதியொன்றின் பின்பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மண்மேடு சரிந்து விழுந்ததில் 5 குடியிருப்புக்கள் முற்றாக சேதமடைந்துள்ளன என நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

தெரேசியா தோட்டத்திலுள்ள முதலாம் லயன் குடியிருப்பு தொகுதியொன்றில் சமையலறைகள் அமைந்துள்ள 5 குடியிருப்புகளின் பின்பகுதியில் இந்த மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளன.

இதன் காரணமாக அக்குடியிருப்புக்களில் வசித்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக அத்தோட்டத்தின் மற்றுமொரு பாதுகாப்பான கட்டடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், குடியிருப்புக்களின் மீது வீழ்ந்துள்ள மண்குவியலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொகவந்தலாவ தெரேசியா தோட்டத்தின் தோட்ட அதிகாரி இமேஷ் போகவத்த தெரிவித்தார்.

தோட்ட முகாமைத்துவம் இவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து வருகின்றது.

# உயர் கல்வி வழிகாட்டலுக்கான பயிற்சிப் பாசறை கொழும்பில்!





(சப்னா றிபாஸ்)

மாணவர்களுக்கான உயர் கல்வி வழிகாட்டல் பயிற்சிப் பாசறை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

மெட்ரோ பொலிடன் கல்லூரியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் பயிற்சி நிகழ்வில் கொழும்பு இராமநாதன் பெண்கள் இந்துக் கல்லூரி மற்றும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் க.பொ.த. சாதாரண தரம் , க.பொ.த. உயர்தரம் கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் பங்கு பற்றினர்.

மெட்ரோ பொலிடன் கல்லூரியின் முதல்வர் சிராஸ் மீராசாஹீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் சீன விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உத்தியோக பூர்வ விஜயமாக நேற்றிரவு சீனாவிற்குப் பயணமாகியுள்ளார். அவர் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருப்பார் என்று கூறப்பட்டது. ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் சீனாவிற்கு அவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

இந்த விஜயத்தின் போது பிரதானமாக அவர் இலங்கைக்கான சீன அரசின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்துடன் கலந்துரையாடவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் சீனாவின் 'ஒரே மண்டலம் ஒரே பாதை' திட்டதின் நான்காவது மாநாட்டிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவிருக்கின்றார்.

சீன விஜயத்தின் போது, அந்த நாட்டின் அதிபர் உட்பட சீனாவின் பல உயர்மட்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் அவர் விரிவான பேச்சுகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளார் என்று கூறப்பட்டது.

அரசியலில் பெரும் நரித் தந்திரசாலி என்று பெயரெடுத்தவர் ரணில். அது வெறுமனே உள்நாட்டு அரசியலில் மட்டுமின்றி, சர்வதேச ராஜதந்திர விடயங்களையும் கையாள்வதிலும் கூடத்தான்.

தமது அரசியல் அதிகாரத்தைப் பொறுத்தவரை வாழ்வா, சாவா என்ற கணக்கீட்டுக்கு முடிவுரைக்கும் - தீர்மானிக்கும் - ஒரு கள விஜயமாகத்தான் சீனப் பயணத்தை அவர் மாற்றி இருக்கிறார் என்பது புலப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவித் திட்டங்களை உரிய காலத்தில் பெற்று நாட்டை பொருளாதார இக்கட்டிலிருந்து மீட்பதில்தான் தன்னுடைய அரசியல் எதிர்காலமும் தங்கியுள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நன்கு புரிந்துள்ளார். வெளிநாட்டுக் கடன்களை அந்தந்த நாடுகளின் இணக்கத்துடன் இலங்கை நாடு மறுசீரமைத்தால் மட்டுமே, நாட்டின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிட்டும்.

வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் விடயத்தில் இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கியுள்ள சீனா அந்த உத்தேசக் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு இணங்கினால் மட்டுமே அத்திட்டம் சாத்தியமாகும். அதற்காக சீனாவைத் தாஜா செய்து, இணங்க வைக்கும் திட்டத்துடன்தான் நரித் தந்திரசாலியான ரணில் சீனாவுக்கு புறப்பட்டிருப்பார்.

ஏற்கனவே கடந்த ஒரு மாதமாக, மேற்குலகைப் பகிரங்க மேடைகளில் கரித்துக் கொட்டி, சீண்டி வரும் அவர், அதன் மூலம் சீனத் தரப்பை ஒரு வழிக்குக் கொண்டு வருவதில் வெற்றியும் கண்டிருக்கின்றார் என்றே கூற வேண்டும். ஆனால் அதையொட்டி, இந்தியா மற்றும் மேற்குலகம் அவர் மீது கடும் சீற்றத்தில் - காய்ச்சலில் - இருக்கின்றமை தெளிவு.

இந்தியாவையும் மேற்குலகையும் பகைத்து, ரணில் எடுக்கும் சீனச் சார்புப் போக்கு, இப்போதைக்கு ரணிலுக்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம். ஆனால் காலப்போக்கில் அதுவே அவருக்கும், அவரது அரசுக்கும், அவரது தேசத்துக்கும் பெரும் நெருக்கடியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# வெள்ளத்தில் மூழ்கியது பண்டாரவளை நகரம்!

நேற்றுப் பெய்த கனமழை காரணமாக பண்டாரவளை நகரின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கொழும்பு – பதுளை பிரதான வீதியில் பண்டாரவளை ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அதன் வீதி நான்கு அடி நீரால் நிரம்பியுள்ளதாகவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் புலமைப்பரிசில் பரீட்சை முடிந்து வீடுகளுக்கு செல்ல வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

இதன் காரணமாக வாகனங்களின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாக செய்தியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

# காத்தன்குடிபிரதேசத்தில் ஐஸ் போதை பொருளுடன் இரு வியாபாரிகள் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ்பிரிவிலுள்ள பூநொச்சிமுனை பகுதியில் 5 கிராம் 40 மில்லிக்கிராம் ஜஸ் போதை பொருளுடன் மாமாங்கம் மற்றும் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகளை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது தாங்கள் செய்துள்ளமையுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அன்றிரவு பூநொச்சிமுனை பகுதி வீதியில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு வீதியில் காத்துக் கொண்டிருந்த காத்தான்குடியைச் சேர்ந்த ஒரு வியாபரியிடம் மாமாங்கத்தில் இருந்து மோட்டர் சைக்கிளில் சென்ற மற்றைய வியாபாரி கொடுக்கல் – வாங்கலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை அவதானித்த பொலிஸார் அவர்களை அங்கு வைத்தே சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

இதில் மாமாங்கத்தைச் சேர்ந்த 39 வயதுடைய வியாபரியிடமிருந்து 5 கிராம் 250 மில்லிக்கிராம் ஜஸ் போதை பொருளை மீட்டமையுடன், காத்தான்குடியைச் சேர்ந்த 40 வயதுடைய வியாபாரியிடமிந்து 150 மில்லிக்கிராம் ஜஸ்போதை பொருளையும், சட்டவிரோத வியாபாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐ.தே.கவின் விசேட மாநாடு 21 ஆம் திகதி கொழும்பில்!

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் பிற்பகல் 2 மணிக்கு இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கட்சியின் செயற்குழுவினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது நிலவும் காலநிலையைக் கருத்தில் கொண்டு இந்த விசேட மாநாட்டை உள்ளக அரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த மாநாட்டில் கட்சியின் யாப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படுமெனத் தாம் நம்புகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் இளைஞர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, புதிய தீர்மானங்களை நிறைவேற்றி, புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் கட்சிக் கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் நாட்டின் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் அதிகளவான இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# காசாவில் முதல் 7 நாள்களில் 10 லட்சம் பேர் இடம்பெயர்வு



இஸ்ரேல் – ஹமாஸ் போர் கடந்த 7 ஆம் திகதி தொடங்கியது. இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலர் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த போர் தாக்குதலால் மக்கள் தங்களின் வீடு, உடமைகளைவிட்டு வெளியேறி வருகின்றனர். இந்நிலையில், காசாவில் மோதலின் முதல் ஏழு நாள்களில் இதுவுரை 10 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, ஐ.நாவின் தகவல் தொடர்பு இயக்குனர் ஜுலியட் டுமா கூறுகையில், "காசாவில் நடந்த போரின் முதல் ஏழு நாள்களில் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மக்கள் தொடர்ந்து தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுகின்றமையால் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

# இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவில் ராக்கெட் தாக்குதலுக்கான சைரன் ஒலி!



இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையேயான மோதல் நேற்று 9ஆவது நாளாக நீடித்து வருகிறது.

கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர் ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். மேலும் இஸ்ரேலுக்குள் ஊடுருவியும் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் ஏராளமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பலரை பிணை கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதையடுத்து போர் பிரகடனத்தை அறிவித்த இஸ்ரேல் பதிலடி தாக்குதல் நடத்தியது. ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள காசா முனை மீது ஏவுகணைகள் வீசப்பட்டன. இரு தரப்பிலும் இதுவரை அப்பாவி பொதுமக்கள் உள்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர்.

ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற பிணை கைதிகளை இஸ்ரேல் இராணுவம் மீட்டது. இதையடுத்து போர் தாக்குதலை தீவிரப்படுத்த இஸ்ரேல்ஈராணுவம் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டது. எல்லையில் 3 லட்சம் வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் ராக்கெட் தாக்குதல் குறித்து சைரன் ஒலிக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

காசா பகுதியில் இருந்து இஸ்ரேலின் தெற்கு மீது ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

லெபனான் ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லா, இஸ்ரேலிய வடக்கு எல்லைக் கிராமத்தில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனான் உடனான வடக்கு எல்லையில் இருந்து 4 கி.மீ., வரையிலான பகுதியை இஸ்ரேல் சீல் வைத்துள்ளது.

# வடக்கு காசாவுக்குள் எந்நேரத்திலும் இஸ்ரேல் இராணுவம் நுழையலாம்!

## உத்தரவுக்குக் காத்திருகின்றனவாம் படைகள்






இஸ்ரேல் – பலஸ்தீனம் போரை அடுத்து காசாவின் வடக்குப் பகுதியைப் போர் மண்டலமாக அறிவித்த இஸ்ரேல் இராணுவம் அங்கு வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்களை 24 மணி நேரத்துக்குள் வெளியேற வேண்டும் எனக் கெடு விதித்தது. தற்போது மேலும் 3 மணி நேரம் கெடு நீடித்து இருக்கிறது. இதனால், இஸ்ரேல் இராணுவம் எந்நேரத்திலும் காசாவுக்குள் தரைவழித் தாக்குதலைத் தொடங்கலாம் என்ற அச்சத்தால் வடக்கு காசா மக்கள் உயிருக்குப் பயந்து அங்கிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர்.

மக்கள் தங்களது உடைமைளை கார்கள், லாரிகள் மற்றும் கழுதை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு தெற்கு காசா நோக்கி சென்று வருகின்றனர். வாகன வசதி இல்லாத பலர் நடை பயணமாகவே தெற்கு காசாவுக்குச் செல்கின்றனர்.

இத்தகைய சூழலில், இஸ்ரேல் இராணுவத்தினர் அனைத்துப் போர் தளவாடங்களுடன் எல்லையில் தயார் நிலையில் காத்திருக்கின்றனர். காசா முனை மீது தாக்குதல் நடத்துவதற்கான உத்தரவு கிடைத்த மறுநொடியே தாக்குதலைத் தொடங்குவதற்காகத் தயார் நிலையில் வீரர்கள் உள்ளனர் என இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். இராணுவ வீரர்கள் முகாமிட்டு இருக்கும் பகுதியிலேயே அவர்களுக்கு உணவு தயாரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான படங்களும் வெளியாகியிருக்கின்றன.

# மெகா கூட்டணிக்கு அ.தி.மு.க. முயற்சி!

## சீமானை இழுக்கவும் வலை விரிப்பு



பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து வெளியேறிய அ.தி.மு.க., நாடாளுமன்றத் தேர்தலில் புதிய கூட்டணியை உருவாக்க அதிரடியாகக் காய் நகர்த்தி வருகிறது.

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வியூகம் வகுத்து வருகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் ஏற்கனவே இடம் பெற்றிருந்த தோழமைக் கட்சிகளான பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளை மீண்டும் கூட்டணியில் சேர்த்துக் கொண்டு புதிதாக மெகா கூட்டணியை அமைக்க அவர் முடிவு செய்துள்ளார். இதற்கான பேச்சுகள் இரகசியமாக நடைபெற்று வருகின்றன.

இந்த கூட்டணியில் புதிய கட்சியாக சீமானின் நாம் தமிழர் கட்சியை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சீமானிடம் விரைவில் வெளிப்படையாக பேச்சு நடத்தி அவரைக் கூட்டணிக்கு இழுக்க அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகள் முடிவு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே இரகசிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்று உள்ளன.

இது தொடர்பாக அ.தி.மு.க. நிர்வாகி ஒருவர் கூறும் போது, பா.ஜனதா கூட்டணியில் இருந்து வெளியேறிய பிறகு அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க பல கட்சிகள் ஆர்வமாக உள்ளன. அந்த வகையில் சீமானின் நாம் தமிழர் கட்சியை அ.தி.மு.க. கூட்டணிக்கு இழுத்து கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.

இதுபற்றி நாம் தமிழர் கட்சியினர் கூறும்போது, "எங்களுக்கு கூட்டணி அழைப்பு வந்தது உண்மைதான்" என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறும்போது, நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரையில் தனித்து போட்டியிடும் முடிவில் உறுதியாகவே இருக்கிறோம். ஆனால் அரசியலில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சி சீமானால் தொடங்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகிறது. இதுவரை நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலுமே அந்த கட்சி தனித்தே போட்டியிட்டுள்ளது. சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வந்த போதிலும் குறிப்பிடத்தக்க அளவில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி 7 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. அந்த தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு 3 ஆவது இடம் கிடைத்தது. 170 க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு அடுத்த இடத்தைப் பிடித்துச் சாதித்திருந்தனர். உள்ளாட்சி தேர்தலில் பல இடங்களில் வெற்றியும் பெற்றிருந்தனர்.

நாம் தமிழர் கட்சயின் இந்த வாக்கு சதவீதம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனால் வருகிற நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் 10 சதவீதத்தைத் தாண்ட வாய்ப்பிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கணித்துள்ளனர். இதை மனதில் வைத்துதான் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சீமானை அ.தி.மு.க. கூட்டணிக்கு இழுத்துவிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனால் நாம் தமிழர் கட்சிக்குள் கூட்டணி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு பிரிவினர் கூட்டணி அமைக்கலாம் என்றும், இன்னொரு பிரிவினர் கூட்டணி வேண்டாம் என்கிற கருத்திலும் இருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

ஆனால் கூட்டணி விஷயத்தில் சீமான் எடுக்கும் முடிவே இறுதி முடிவாக இருக்கும் என்றும் அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் விஜயகாந்தை சேர்த்து ஜெயலலிதா வெற்றி பெற்றார். அதே பாணியில் தற்போது சீமானைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டால் வெற்றி பெற்று விடலாம் என்று எடப்பாடி பழனிசாமி கணக்கு போட்டிருக்கிறார் என அ.தி.மு.க.வினர் தெரிவித்து உள்ளனர். எடப்பாடி பழனிசாமியின் இந்த வியூகம் பலன் அளிக்குமா? அ.தி.மு.க. கூட்டணியில் சீமான் சேருவாரா? – என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்

# புதுடில்லியில் நில அதிர்வு

இந்தியத் தலைநகர. புதுடெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள நகர்புற பகுதிகளில் நேற்று மிதமான நில அதிர்வு உணரப்பட்டது.

நேற்று மாலை 04:08 மணியளவில் ஹரியானா மாநிலத்தின் ஃபரிதாபாத் நகரிலிருந்து கிழக்கே 9 கிலோமீட்டர் தொலைவில், டெல்லிக்கு தென்கிழக்கே 30 கிலோமீட்டர் தொலைவில், 10 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த அதிர்வு மையம் கொண்டிருந்தது. இந்த அதிர்வு, ரிக்டர் அளவுகோலில் 3.1 என பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அச்சமடைந்த பொது மக்கள் உடனடியாக தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறி சாலைகளில் கூடி விட்டனர்.

இது குறித்து அவசர கால பாதுகாப்பு அறிவுரைகளை வழங்கியுள்ள டெல்லி பொலிஸ், லிஃப்டை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும், கட்டடங்கள், மரங்கள், சுவர்கள், தூண்கள் ஆகியவற்றின் அருகே நிற்காமல் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

டெல்லி காவல்துறை, அவசர உதவிக்கு 112 எனும் எண்ணை அழைக்குமாறு பொதுமக்களை கோரியுள்ளது. இத்துடன் நில அதிர்வு காலங்களில் செய்ய வேண்டியவை, செய்ய கூடாதவை ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவுறுத்தல்களையும் வெளியிட்டுள்ளது.

புது டெல்லி மட்டுமின்றி வட இந்தியாவின் சில பகுதிகளிலும் இது உணரப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகர் டெல்லியில் இம்மாதம் இது இரண்டாவது முறையாக நடைபெறும் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாத தொடக்கத்தில் டெல்லியை உள்ளடக்கிய வட இந்திய பகுதிகளில் அடுக்கடுக்காக ஏற்பட்ட நில அதிர்வுகள் அதிகபட்சமாக ரிக்டர் அளவுகோலில் 6.2 எனப் பதிவானது குறிப்பிடத்தக்கது.




# நடப்புச் சம்பியனுக்கு அதிர்ச்சி வைத்தியம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்து, ஆப்கானிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து – ஆப்கானிஸ்தான் அணிகள் டில்லியில் மோதின.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 284 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஆப்கானிஸ்தான் சார்பாக துடுப்பாட்டத்தில் குர்பாஸ் 80 ஓட்டங்களையும் இக்ராம் 58 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பின்னர் 285 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஆரம்பத்திலிருந்தே அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பேர்ஸ்டோ (2), மலான் (32) ஆகியோரையடுத்து களமிறங்கிய ரூட் (11), பட்லர் (9), லிவிங்ஸ்டன் (10), சாம் கரன் (10), வோக்ஸ் (9) ஆகியோரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய புரூக் 66 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அணி 169 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

பின்னர், அடில் ரஷீத் (20), மார்க் வுட் (18) ஆகியோரும் ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களுள் சுருண்டது.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு அதிர்ச்சி அளித்து 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

இங்கிலாந்தின் ட்ரொப்லி (15) ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

ஆப்கானிஸ்தான் சார்பாக பந்துவீச்சில், முஜீப் உர் ரஹ்மான், ரஷீத் கான் ஆகியோர் சிறப்பாக பந்துவீசி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாகஆப்கானிஸ்தானின் முஜீப் உர் ரஹ்மான் தெரிவானார்.

இங்கிலாந்தை வீழ்த்தியதன் மூலம் ஆப்கானிஸ்தான் முதல் வெற்றியைப் பதிவுசெய்தது. இங்கிலாந்துக்கு இது இரண்டாவது தோல்வியாகும்.

அதேவேளை, ஆப்கானிஸ்தான் அணி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்திலிருந்து ஆறாவது இடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து தனது ஐந்தாவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

இந்நிலையில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை அணி, அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளது. இரு அணிகளும் தாம் எதிர்கொண்ட இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளன. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி, தமது முதல் வெற்றியைப் பதிவு செய்யும்.




**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.821 |
| 02 | நியூஸிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.604 |
| 03 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.360 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.652 |
| 07 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 08 | இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.161 |
| 09 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |
| 10 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.846 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

# கொழும்பு சாஹிராவை வீழ்த்தி சம்பியனானது சென். பற்றிக்ஸ்



பாசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியுள்ளது.

பாசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 20 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் (09) நடைபெற்றது

இதில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு சாஹிராக் கல்லூரி அணிகள் மோதின.

இந்த இறுதியாட்டத்தில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 4 : 3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.

2022ஆம் ஆண்டிலும் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியிருந்தது.

நடப்பு ஆண்டின் தேசிய மட்ட போட்டிகளில், இந்த அணி தனது முதலாவது போட்டியில் அனுராதபுரம் நச்சதுவா முஸ்லிம் மகா வித்தியாலயத்தை 7:0 என்ற கோல்கள் அடிப்படையிலும் இரண்டாவது போட்டியில் கடயமுட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியை 3:1 என்ற கோல்கள் அடிப்படையிலும் காலிறுதியாட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் பலம் பொருந்திய மட்டக்களப்பு ஏறாவூர் அலிஹார் தேசிய பாடசாலையை 2:0 என்ற கோல்கள் அடிப்படையிலும் அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 1:0 என்ற கோல்கள் அடிப்படையிலும் வெற்றி பெற்றிருந்தது.



பின்னர் இறுதிப்போட்டியில் கொழும்பு சாஹிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

# யாழ்ப்பாணக் கல்லூரியின் டென்னிஸ் போட்டி



யாழ்ப்பாணக் கல்லூரி நடாத்திய இரட்டையர் டென்னிஸ் போட்டியில் முதலாம், மூன்றாம் இடங்களை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பெற்றுள்ளது.

இரண்டாமிடத்தை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் டென்னிஸ் போட்டி நடத்தப்பட்டது.

இதில், 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இரட்டையர் பிரிவுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அ.பிரியஷாகான் – அ.சனோஜன் ஜோடி, 6:2, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரியை வென்று முதலிடம் பிடித்தது.

அதேவேளை, அதே பிரிவில் மூன்றாவது இடத்துக்கான போட்டியில் சென். பற்றிக்ஸின் கொ.சியாம்சன் – அ. ஸ்டேபோன் ஜோடி, யாழ்ப்பாணக் கல்லூரியை 6:2, 3:6, 7:5 என்ற கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது.






**உரலார் கேள்வி:- அண்மையில் நீங்கள் பார்த்து ரசித்த ஒரு சினிமா பற்றிச் சொல்லுங்களேன்...!**

**உலக்கையார் பதில் :-** எப்பவோ பார்த்திருக்க வேண்டிய ஒரு சினிமாவை, அது வந்த காலத்தில் பார்க்காமல் விட்டுவிட்டு, அண்மையில் தற்செயலாக அதைப் பார்க்க நேர்ந்தது. ஆச்சரியம்! பிரமிப்பு! மனநெகிழ்ச்சி! என அந்தசினிமா தந்த உணர்வுகளால் நெகிழ்ந்து போனேன். அந்தச் சினிமாவை உரியகாலத்தில் ஏன் பார்க்கவில்லை எனக் கேட்பீர்கள். நியாயமான கேள்வி அது. அந்தப் படம் பற்றி வந்த விளம்பரங்களில் 'டூப்புகளின்' சாகசங்களைத் தமது சாகசமாய்க் காட்டி வியக்க வைக்கும் விஜய், அஜித், சூரியா போன்ற கவர்ச்சி



மிக்க கதாநாயகர்களைக் காணமுடியவில்லை. ஒப்பனையால் ஒளிவீசும் கதாநாயகிகளையும் காணமுடியவில்லை.

எனவே, இந்தப் படத்தில் என்ன இருக்கப் போகிறது என நினைந்து, மற்றவர்களைப் போலவே நானும் ஏமாந்து போனேன் என்பதுதான் உண்மை.

'போரடித்த' ஒரு பொழுதில் தற்செயலாய் 'யூடியூபில்' உலா வந்தபோது, அந்தப் படத்தின் முழுமையும் போடப்பட்டிருப்பதாய் திரையில் வர, வேண்டாவெறுப்பாக அதனை என் கை 'கிளிக்கியது'. படம் தொடங்கிய சில நேரத்துக்குள் அது எனது மனதை 'ஏகாக்ர' நிலையடையச் செய்து ஒன்ற வைத்தது ஓர் ஆச்சரியம்.

படத்தின் பெயரைச் சொல்லாமலே பேசிக் கொண்டிருக்கிறேன். 'கடைசி விவசாயி' என்பது அப்படத்தின் பெயர். அதன் கதாநாயகரின் பெயர் படத்தில் மாயாண்டி, நிஜத்தில் நல்லாண்டி. ஒரு கதாநாயகனின் பளபளப்புக்கள் எதுவும் இல்லாதது மட்டுமல்லாமல், நரை, திரை, மூப்பு என்பவை உடல் முழுவதும் அப்பிக்கிடந்த ஒரு மனிதர் அவர்.

வறண்ட நிலத்தில் ஆழமாய்க் குழாய்க்கிணறு அடித்து நீரை வெளிக் கொணர்ந்து பீச்சி அடிக்குமாற் போல நடிப்பு அனுபவத்தை துளியேனும் அறியாத அந்தக் கிழவரை, படத்தின் பிரதான பாத்திரமாய் ஆக்கி, அவரிடம் இருந்து இயல்பான நடிப்பை வெளிக்கொணர்ந்திருக்கும் இயக்குனர் மணிகண்டனின் ஆற்றலைப் பாராட்டாதவன் நரகத்துக்குப் போவான் என்பது நிச்சயம்.

"மயிலு செத்துப் போச்சுய்யா", "போகச் சொல்லிட்டாங்களா?" என்பது போன்ற வெகுளித் தனமான சிறுசிறு தொடர்களால் நம் நெஞ்சை அள்ளுகிறார் கிழவர். தனது வயலுக்கு தண்ணீர் பாய்ச்சப் போக வேண்டும் என்று நீதிபதியிடம் கோரிக்கை வைக்கும் போது "ஆயிரம் உசிரு அங்க இருக்குது" என்று சொல்வதும் வெள்ளைக்காரரின் விதையில்லாத பழத்துக்கான விதையை வியாபாரி சிபாரிசு செய்ய, "அப்ப அவங்க பிள்ளையளுக்கும் அப்பிடி இருந்தா பரவாயில்லையோ?" என்று கிண்டலாய்ச் சொல்வதும், கடையில் கிடக்கும் புண்ணாக்குக் கட்டியை வாயில் உடைத்துப் போடுவதுமாக அந்த மனுசன் செய்யும் விடயங்கள் எல்லாவற்றையும் பார்த்தால், இந்தப் படத்தில் அந்த மனுசன் நடிக்கவே இல்லை, வாழ்ந்திருக்கிறார் என்பதுதான் உண்மை என்று தெரியும்.

விஜய் சேதுபதி,யோகிபாபு போன்ற பிரபல நடிகர்கள் எல்லாரையும் கிழவர் தன் நடிப்பால் அள்ளி சாப்பிட்டு விடுகிறார். கடைசியில் நடக்கும் கிழவரின் மரணம் கவர்ச்சி மிக்க கதாநாயகர்களின் மரணத்தை விட நம்மைப் பாதிக்கின்றது.

சினிமாத்தனம் இல்லாத மிக இயல்பான நீதிமன்றமும், உண்மைக்குச் சார்பாய் நிற்கும் அந்தப் பெண் நீதிபதியின் நிமிர்வும், கிராம மக்களின் வஞ்சகமில்லாத உரையாடலும் நீண்ட நாள்களுக்கு நம் மனதைவிட்டு அகலப்போவதில்லை.

இப்படம் வெளிவருவதற்கு முன்னரே கிழவர் இறந்துவிட்டதாய்ச் சொல்கிறார்கள். இப்படத்துக்காக கிழவருக்குக் கிடைத்த விருதைக் கூட அவரது குடும்பத்தார்தான் பெற்றுக்கொண்டனராம். அந்தக் கிழவரின் ஆன்ம சாந்திக்கு ஈழத்தவர்களும் வழிபாடு இயற்றுவோம்.

தில்லானாமோகனாம்பாள், வியட்நாம் வீடு, முதல்வன், நாட்டாமை போன்ற திரும்பத் திரும்பப் பார்த்தாலும் அலுக்காத, காலம் கடந்து நிற்கும் படங்களின் வரிசையில் 'கடைசி விவசாயியும்' சேர்ந்து கொள்கிறார்.

**சல்லடையாரின் சலிப்பு :- தமிழ் சினிமாவுக்கு கிடைத்த கடைசியும் முதலுமான விவசாயி..!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- வெளிநாட்டு தொலைக் காட்சி நிருபருடனான பேட்டியின்போது, ஜனாதிபதி ரணில் கொதித்தெழுந்தமையைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** பார்த்தேன்! ரசித்தேன்! வியந்தேன்!. அவரது வாதங்களுக்குப் பின்னால் சத்தியம் இழையோடவில்லை என்பது மட்டுமே குறையாகப்பட்டது.

ஆனால், ஒரு சிறிய நாட்டின் தலைவனாய் இருந்து கொண்டு, தன்மானத்தை விட்டுக் கொடாமல் அவர் கொதித்துக் கோபம் கொண்டது ரசிக்க வைத்தது.

**(10ஆம் பக்கம் பார்க்க)**

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அமெரிக்காவில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், 'ஏன் சர்வதேச விசாரணைக்கு உத்தரவிடவில்லை?' என உங்களால் கேட்க முடியுமா? நாங்கள் என்ன உங்கள் பார்வையில் இரண்டாம் தர நிலையில் இருக்குறோமா?" என்று உண்மைக் கோபத்தோடு அந்த நிருபரைப் பிடித்து உலுக்கி எடுத்தது மகிழ்ச்சி தந்தது.

சரி, பிழை ஒரு பக்கம் இருக்க, மற்றவர்களிடம் கையேந்தும் நிலையில் நாடு இருந்தாலும்,அதைக் கருதி எல்லோரையும் சமாளிக்க நினைக்காமல், "எங்களுக்குக் கட்டளையிட நீ யார்?" என்று கேட்ட ரணிலின் அந்தத் துணிவில் ஒரு தலைவனின் வீரியம் பதிந்திருந்தது மட்டும் உண்மை.

"நாங்கள் உங்கள் பார்வையில் இரண்டாம் நிலைப்பட்டவர்களா?" என்ற ரோசம் மிகுந்தகேள்வியைத்தான், ஈழத்தமிழர்களும் அரசாங்கத்திடம் கேட்டு நிற்கிறார்கள். நிருபரிடம் தான் கேட்ட கேள்வியைப் போலவே ஈழத் தமிழரின் கேள்வியிலும் நியாயம் இருப்பதையும் ஜனாதிபதி உணர்வாரா?

அந்த நிருபரிடம் காட்டிய அதே வீரியத்தோடு, உண்மையை மறைக்க நினைக்காமல், இந்த நாட்டின் இனப்பிரச்சினையையும் தீர்த்து வைப்



பாரேயானால், உலக வரலாற்றில் ஒரு உயர்ந்த தலைவராய் ரணில் பதிவாவார் என்பது மட்டும் நிச்சயம்.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியாருக்கு தட்டவும் தெரியுது குட்டவும் தெரியுதுங்கோ!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- இஸ்ரேலின் மீதான 'ஹமாஸ்' தீவிரவாதக் குழுவினரின் தாக்குதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** அத்தாக்குதலால் இஸ்ரேல் மட்டுமல்ல உலகம் முழுவதுமே அதிர்ந்து பே-யிருப்பது உண்மை.

இஸ்ரேல் தன் நாட்டின் பாதுகாப்பிற்காக 'அயன்டோம்' என்கின்ற ஒரு பொறி முறையைக் கண்டுபிடித்து வைத்திருந்தது. அமெரிக்கா போன்ற நாடுகள் கூட ஆச்சரியப்பட்டு கேட்டு நின்ற பொறிமுறை அது. தன் நாட்டின் வான்பரப்புக்குள் வேறெந்த நாட்டினது ஏவுகணைகள் ஏதும் நுழையும் முன்னரே, அதனை 'மோப்பம்' பிடித்து தன்நாட்டு ஆயுதங்களுக்கு அவ்வரவை உடன் அறிவித்து,வந்த ஏவுகணைகளை அழிக்கும் சக்தியே 'அயன்டோம்' என்கின்ற பொறிமுறையாகும். அப்பொறிமுறை இருக்கும் வரைக்கும் எதிரிகளால் தன் நாட்டுக்குக் கவலை இல்லை என்று நினைத்திருந்த இஸ்ரேலின் எண்ணத்தை, "ஹமாஸ்" குழுவினர் உடைத்தெறிந்திருக்கிறார்கள் அதுவே அவர்களுக்கான வெற்றிதான்.

ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான 'ட்ரோன்களை' ஏவ, இஸ்ரேலின் 'அயன்டோம்' அந்த 'ட்ரோன்களில்' எதை மோப்பம் பிடித்து அறிவிப்பது என்று தடுமாறும் நேரத்தைப் பன்படுத்தி இஸ்ரேல் மேல் தாக்குதலை நிகழ்த்தி இருக்கிறார்கள் "ஹமாஸ்" குழுவினர்கள். இஸ்ரேலின் எதிர்பார்ப்பைத் தாண்டிய தாக்குதல் அது.

அத்தாக்குதலின்போது உள் நுழைந்து பொது மக்களைப் பணயக்கைதிகளாய்ப் பிடித்து, 'ஹமாஸ்' குழுவினர் செய்யும் துன்பம் மன்னிக்கமுடியாதது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தனக்கு ஏற்பட்ட தோல்வியின் பிரதிபலிப்பை 'காசா' மீதான ஈவிரக்கமற்ற கடும் தாக்குதல் மூலம் காட்டிக் கொண்டிருக்கிறது இஸ்ரேல். இவர்களுக்



கும் பொதுமக்கள் பற்றி கவலையில்லை.

இக்கேள்விக்கு நான் பதில் எழுதிக் கொண்டிருக்கும்வரை, ஐந்து நாள்களாகியும் போர் முடியாமல் நடந்து கொண்டிருக்கிறது. இஸ்ரேலுக்கு கைகொடுப்பதற்காய் தனது விமானந்தாங்கிக் கப்பலை அமெரிக்கா அனுப்பி வைத்திருப்பதிலிருந்து இப்போரின் ஆபத்து நிலையை அறிய முடிகிறது.

ஒருபக்கம் உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்குமான யுத்தம், மறுபக்கம் இஸ்ரேலுக்கும் 'ஹமாசுக்குமான' யுத்தம். இப்படியாக குலைநடுங்க வைக்கும் போர்களுக்கான பட்டியல் நீண்டு கொண்டிருக்கிறது. மூன்றாம் உலகப்போர் வெடித்து விடுமோ என இராணுவ ஆய்வாளர்கள் அஞ்சுகிறார்கள். பூமியின் கதி என்னாகப் போகிறதோ? யாரறிவார்?

**சல்லடையாரின் சலிப்பு :- அட வாரிதி யாருக்கு இந்த விடயங்கள் எல்லாங் கூட தெரியுதுங்கோ!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- இன்று வல்லரசு நாடுகள் தம் நாடு செழிப்பதற்காக வறுமையுற்ற நாடுகளை விழுங்கப் பார்ப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** இன்றைக்கு ஏழை நாடுகளை மட்டுமல்ல, ஐ.நா.சபை போன்ற உலக சமாதானத்துக்காக உருவாக்கப்பட்ட பொது நிறுவனங்களையும் வல்லரசுநாடுகள் தம் கைவசப்படுத்திவிட்டன. உலகில் நடக்கும் சிறுசிறு குற்றங்களுக்காக கூட்டங்கள் போடுவதும் அறிக்கைகள் விடுவதுமாக "அலப்பறை" பண்ணிக் கொண்டிருக்கும் ஐ.நா.சபை சார்ந்த நிறுவனங்கள், வல்லரசுகளின் வலிய குற்றங்கள் பற்றி முணுமுணுப்பது கூட இல்லை.

வெறுமனே யுத்தங்களால் மட்டுமல்லாமல், தமது அதிகாரங்களை பயன்படுத்தி வேறு பல விடயங்களிலும் வல்லரசு நாடுகள் ஏழை நாடுகளை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில், அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கூட்டாகச்சேர்ந்து, இயற்கைப்பாதுகாப்பிற்காக ஏழை நாடுகள் படிம எரிபொருள்களை பாவிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியிருக்கின்றன.

இத்தனைக்கும் ஒரு சராசரி ஆபிரிக்கனை விட, ஒரு சராசரி பிரிட்டன் வாசி வெளியேற்றும் காபனைட்ஒக்சைட்டின் அளவு 200 மடங்கு அதிகம் என்றும், இவ் ஒப்பீட்டில் ஓர் அமெரிக்கன் பாவிக்கும் அளவு 585 மடங்கு அதிகம் என்றும் ஆய்வாளர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆபிரிக்காவில் ஒருவர் ஓராண்டிற்குப் பயன்படுத்தும் மின்சாரத்தை அமெரிக்கர் ஒருவர் ஒருநாளில் பயன்படுத்துகிறாராம்.

இப்படியாக தமது அதிகாரத்தை வைத்து வல்லரசு நாடுகள் செய்யும் அநியாயத்திற்கு ஓர் அளவில்லை. ஏழை நாடுகளை நசுக்கி இப்பூமியின் வளங்களைத் தமதாக்குவதில் வல்லரசுநாடுகள் மிக மோசமாக நடந்து கொள்கின்றன.

மற்றவர்களுக்கு தீமை செய்கிறார்கள் என்பதற்காக, அத்தகையவர்களுக்கு பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்றெல்லாம் பட்டம் சூட்டி, உலக அரங்கில்நிற்கவைக்கும்இந்தவல்லரசுநாடுகளுக்கு தான் மேற் சொன்ன பட்டங்கள் பொருந்தும் என்று கருதுகிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- அந்த வசதிக்காகத்தான் எங்கட ஆக்கள் எல்லாம் அங்க ஓடுகினம் போல...**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



# இஸ்ரேலிய பயங்கரவாதத்தை கண்டிக்கிறது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி!

"பலஸ்தீனத்தின் தனிமைப்பட்ட நிலப்பரப்பான காஸா மீது கடந்த ஒருவாரமாக இஸ்ரேல் நடத்தும் மிலேச்சத் தனத்தனமான தாக்குதல்களை மனத நேயம் மிக்க எவரும் ஏற்க மாட்டார் கள். தமது விடுதலைக்காகக் குரல் கொடுத்தும், போராடியும் வரும் உல கின் அனைத்து ஒடுக்கப்படும் மக்க ளோடு இணைந்து நாமும் காஸா மீது இஸ்ரேல் தொடுத்துள்ள கொடூரத் தாக்கு தல்களை வன்மையாகக் கண்டிக்கி றோம். அத்துடன் அமெரிக்க மேற் குலக நாடுகளின் ஆதரவையுடைய இஸ்ரேலிய சியோனிச ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிவரும் பலஸ்தீனிய மக்களுக்கு எமது போராட்ட ஒருமைப் பாட்டையும் தெரிவிக்கிறோம்" – எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அந்த அறிக் கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

பெரும்பாலான பலஸ்தீன மக்கள் தமது தொன்மையான வாழ்விடமான பலஸ்தீன நிலப்பரப்பை மேற்குலகின் ஆதரவுடன் இஸ்ரேலிய சியோனிசவாதி கள் நடத்தி வந்துள்ள ஆக்கிரமிப்புக்குப் பறிகொடுத்துத் தமது சொந்த மண்ணை இழந்து உள்நாட்டிலும் அண்டைய அரபு நாடுகளிலும் பிற உலக நாடுகளிலும் அகதிகளாக வாழ்கிறார்கள். அத்தகைய மக்களிற் பலர் தமது இழந்த நிலங்களை யும் வீடுவாசல்களையும் நினைவில் வைத்திருப்பதற்கு நிலப் பறிகொடுப்பின் அடையாளமாகத் ஒரே ஒரு திறப்பை மட்டுமே தம்முடன் வைத்திருக்கிறார்கள். அத்தகைய மக்களிடையே தாம் இழந்த பலஸ்தீனத்தை மீட்கும் விடுதலைப் போராட்டப் போராளி இயக்கங்களும் போராட்டங்களும் தொடர்ந்தும் இருந்து வருவது இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும். பலஸ்தீனத்தை இழந்த மக்கள் இஸ்ரேலிய ஆக்கிர மிப்பாளர்கள் மத்தியிலேயே மேற்குக் கரையிலும். காஸாப் பிரதேசத்திலும் துயர வாழ்வு வாழ்கிறார்கள். 1994 ஓஸ்லோ உடன்பாட்டின் பின் நிறுவிய பலஸ்தீன அதிகாரப் பிரதேசத்தின் காஸ ாப் பகுதி, ஹமாஸ் எனும் போராளி இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது .அந்த நிலப்பரப்பு அடிக்கடி இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு உட்படும். அதைவிட, மேற்குக் கரையிலும் கிழக்கு ஜெருசலெ மிலும் இஸ்ரேலிய நிலப்பறிப்பு கடந்த சில ஆண்டுகளாகத் தீவிரமடைந் துள்ளது. அதை நிறுத்த மேற்குலகு துணியவில்லை.

இச் சூழலில் ஹமாஸ் போராளிகள் காஸாவிலிருந்து இஸ்ரேலிய ஆக்கிர மிப்பாளர்களை எதிர்த்து எறிகணைத் தாககுதல் தொடுத்தும் காஸாவின் வட எல்லை தாண்டியும் போராடி வருகி றார்கள். இப்போராளி இயக்கத்தையும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை யும் ஒரே தரத்தில் வைத்துப் பார்க்க முடியாது. ஒன்று அமெரிக்க மேற்குலக நாடுகளின் ஆதரவும் அரவணைப்பும் பெற்ற இஸ்ரேலிய அரச பயங்கரவாதம். மற்றது ஒடுக்கப்பட்ட மக்களின் போராளி இயக்கம்.

முப்பது வருடகாலக் கொடிய போரை அனுபவித்த தமிழ் மக்கள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும் காஸா மீதான தாக்கு தல்களையும் உணவு, மின்சாரம், நீர், மருந்து, உணவு உள்ளிட்ட அத்தியாவ சியத் தேவைகளை மறுப்பதையும் ஏற்கமாட்டார்கள். காஸா நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் திட்டத்துடனேயே இஸ்ரேல் காஸா மீது தாக்குதல் தொடுத் துள்ளமை தெளிவு. எனவே அதை முறியடிக்கப் பலஸ்தீன மக்களோடும் அவர்களது போராட்டங்களோடும் நாம் தோளோடு தோளாக நிற்போம்.



# ஐஸ் போதைப் பொருளுடன் கைதானவர் விளக்கமறியலில்

(சப்னா றிபாஸ்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று பதில் நீதிவான் என். தமிழினியன் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று காதரியா வீதியில் 960 மில்லிகிராம் ஐஸ் போதை பொரு ளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் அந்நபரை கைது செய்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத் திய போதே இந்த விளக்கமறியல் உத் தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.



# மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் உடனடித் தீர்வுக்கு ஜனாதிபதி பணிப்பு!

**(நூருல் ஹுதா உமர்)**

மயிலத்தமடு - மாதவனை கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரைக் காணிகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றுள்ளன எனக் கடந்த சில மாதங்களாகக் குற்றச்சாட்டுகள் முன்வைத்துவரும் நிலையில், இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.


இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், மகாவலி திகார சபைப் பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் வன விலங்கு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலதமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ள மாற்று இடஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இருத்தரபினருடைய பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பண்ணையாளர்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்கத் தேவையான உதவி தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.



## தெதுருஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறப்பு

**(ரஸீன் ரஸ்மின்)**

தெதுருஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் நேற்றுக் காலை முதல் திறக்கப்பட்டுள்ளன என நீர்த்தேக்கத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சம்பத் சமரஜீவ தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக தெதுரு ஓயா பகுதிகளில் பெய்துவரும் மழை கடும் மழை காரணமாக நேற்றுக் காலை நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் நிலையில் இருந்ததாகவும் பொறியியலாளர் கூறியுள்ளார்.

இந்த நீர்த்தேக்கத்தின் தற்போதைய நீர்மட்டம் 70.61 மீட்டராக உள்ளதுடன், இதன் வெளியேற்ற அளவு 70.79 மீட்டராகவும் காணப்படுகிறது.

இந்த நிலையில், தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகள் தலா 3 அடி வீதம் திறக்கப்பட்டுள்ளன எனவும், நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 8,400 கன அடி வீதம் நீர் வெளியேறுவதாகவும் பொறியியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நீர் வெளியேறுவதால் தெதுரு ஓயா நீர்த்தேக்கத்திற்கு கீழே உள்ள பகுதிகளுக்கு வெள்ள அனர்த்தம் ஏற்படாது என்றும் பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மலையக ரயில் சேவைகள் மழையால் நேற்றுப் பாதிப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழை காரணமாக, ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

வட்டவளை மற்றும் கலபொடவுக்கு இடையில் பாரிய மரமொன்று தண்டவாளத்தில் விழுந்துள்ளது. இதனால் மலையத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 க்கு பதுளையை நோக்கி புறப்பட்டுச் சென்ற உடரட்ட மெனிக்கே கடுகதி ரயில், பிற்பகல் 1 மணியில் இருந்து கலபொட ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கை பிற்பகல் 3 மணியளவில் நிறைவுறும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் அதையும் தாண்டி அந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது என்று ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

அதனை அகற்றிய பின்னர் ரயில் சேவை தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.





# விவசாய அமைச்சர் அமரவீரவின் பங்கேற்புடன் யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பங்கேற்புடன் யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்றைய தினம் காலை 9 மணி முதல் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், விவசாய அமைச்சு மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது விவசாயத்துறை சார்ந்த பல்வேறு பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

விவசாய ஓய்வூதியம் பெறுவோருக்கும் விவசாயத்தில் நஷ்ட ஈடு பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.





# பலாலி, காங்கேசன்துறை ஊடாக விவசாய ஏற்றுமதிக்கு வழி செய்க!

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. வேண்டுகோள்



யாழ்ப்பாணம் விமானநிலையம், துறைமுகங்கள் ஊடாக எமது விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய குழுக்கூட்டம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களின் தலைமையில் யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதில்கலந்துகொண்டுஉரையாற்றிய அங்கஜன் இராமநாதன் அச்சமயம் இக்கோரிக்கையை முன்வைத்தார். அவர் அங்கு கூறியவை வருமாறு:-

கடந்த 2018-2019 காலப்பகுதியில் விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீரவும், விவசாய பிரதி அமைச்சராக தாமும் கடமையாற்றியபோது எமது யாழ் மாவட்டத்தில் விவசாயப் புத்தெழுச்சியை ஏற்படுத்த அமைச்சர் பெரும் முன்னெடுப்புகளை செய்திருந்தார்.

குறிப்பாக உருளைக்கிழங்கு, மிளகாய் பயிர்ச்செய்கைகளின் ஊடாக யாழ் மாவட்ட விவசாயத் துறையை வருமான மீட்டும் துறையாக மாற்ற எம்மால் முடிந்திருந்தது. சின்ன வெங்காயத்துக்கு அடுத்ததாக உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை தற்போது விளங்குகிறது.

பாரம்பரிய விவசாயத்துடன், பெறுமதி சேர் விவசாய செயற்பாடுகளை யாழில் அறிமுகம் செய்து அதனூடான வருமானங்களை இம்மண்ணுக்கு கொண்டு வர அமைச்சர் முக்கிய பங்காற்றினார்.

குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளின் உருளைக்கிழங்கு அறுவடைகளில் அதிகப்படியான இலக்கு அடைவுமட்டம் (target achieve) 2019ம் ஆண்டில் பதிவாகியுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகளை எமது விவசாயிகள் பயன்படுத்தி வந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவற்றை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எமது விவசாயிகளுக்கு உள்ளூர் விதை உருளைக்கிழங்குகளை பெற்று வழங்குவதற்கு அமைச்சர் உதவி செய்ய வேண்டும்.

அதேவேளை எமது விவசாயிகளின் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. உள்ளூர் ஏற்றுமதிச்சந்தைகளை தாண்டி ஐரோப்பா உள்ளிட்ட சர்வதேச சந்தைகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெற்றுத்தர வேண்டும்.

தற்போது, இந்தியாவுடனான கடல் மற்றும் வான் வழி தொடர்புகளை யாழ் மாவட்டம் கொண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்திய சந்தை வாய்ப்புகளை எமது உற்பத்திகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

ஆகவே கடந்த காலங்களில் எமது விவசாயத்துறைக்கு மேற்கொண்ட உதவிகள் போன்று தற்போதைய இந்நல் வாய்ப்புகளை பயன்படுத்தவும் உதவிகளை செய்ய வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். - எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், துறை சார் திணைக்கள தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.10.2023




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருபீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும்.கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும் போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவு–களை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.10.2023




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப் படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சி யான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன்மீக விஷ யங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கன் ஏற்படலாம். நல்ல புரிந் துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக் கியத்திற்கு சிறந்தது.




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப்பத் தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக் காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே எச்சரிக் கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணை யுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.





